ஓம்

தத். ஸத்.

தேவாரநகரம்

சுத்த அத்வைதி அருட்கவி

ஸ்ரீ விலக்ஷணானந்தஸ்வாமிகள்

அருளிச்செய்த

# பிரமநிஷ்டை


K. CHIDAMBARANATHA MUDALIAR,

THE THANJAVUR ... LIBRARY

DEC 1986

அமரர் கி. அரு... அவர்களின் நினைவு...

அளிப்பவர்

திருமதி சியாமளா அரு... சீர்காழி.

(1982)


இஃது

திண்டுக்கல்

சுப்பாநாயக்கர் அவர்களால்


திருச்சினாப்பள்ளி

ஜெகம் அண்டு கோ., டாட்ஸன் பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

1919

ஓம்

# பிரமநிஷ்டை.

---

பிரம்நிட்டையைப் பேசவும் பேசிலாப்
  பிரமநிட்டையு நிட்டையும் பிரமமே
பிரமநிட் டாரியக்குறும் பிரமமே
  பிரமநிட்டையும் பிரமமும் நிட்டையே. (1)

ஆத்திரமெல்லா நீக்கி யாத்திரமடைந்து நின்ற
  பாத்திரக்கோ சமைந்தும் பாறிடவப் பாற்பார்த்து
நீத்ததை யறிந்துமப்பா னின்றதோ ரவத்தைதாண்டிச்
  சோத்திரச்சேட்டைநின்றாற் சொல்லுவர் பிரமநிட்டை (2)

செய்தவ மெல்லாமாற்றிச் சீதாற்கர்ப்பித் தன்னே
  யைவகைப் புலனைமாட்டி யறுவகைப் பகையைவீட்டி
யுய்வகை நெறியுங்கேட்டு முயர்நிலை யடைதருனே
  மையறும் பரமானந்த மகிழுறும் பிரமநிட்டை. (3)

சாக்கிரங் கனவுமுடல் சகசமாயறிந்து தள்ளிப்
  பாக்கியாஞ் சூனியத்திற் பரமனமடைந்து மப்பா
லாக்கிய மனதையப்பா லாக்குறு மவத்தைதள்ளி
  நீக்கினு லதுவேயென்று நிகழ்த்துவர் பிரமநிட்டை. (4)

ண்ணுறுஞ் செய்கையெல்லாம் பரமெனக் கண்டுமிக்க
எண்ணுறு நினைப்பையந்த விடத்தினிநிறுத்தி யெண்-
நண்ணுத லாகுமந்த நாட்டமே நாட்டமாகப் ணி
பண்ணிய வவதிதானே பரமிகும் பிரமநிட்டை. (5)

சற்குண மெல்லாந்தேர்ந்துஞ் சகசரைச்சார்ந்துஞ் சார்வா
யிற்குணமறிந்து பின்னே யியலுறுங்குணத்தைச் சார
னற்குண நாட்டமின்றி நற்பரம்பொருளே தானுஞ்
சிற்சுபாவத் தானிற்றல் செப்புவர் பிரமநிட்டை (6)

ஆகமம் மறிந்துமத்தா லாகுறும் பயனறிந்து
மேகமாந் தன்னைக்காண விச்சையுற்றடியர் பாத
மேகியே யவராற்பெற்ற யியலுப தேசத்தாலே
பாகியவிச்சை யெல்லாம் பறிதலே பிரமநிட்டை. (7)

எங்குமாய் நின்றநாமே யிலையென வெண்ணிநாளு
மங்கின மதையே கண்டு மகிழுவ மதனைத்தீர்த்து
மங்கியா ஞட்டமின்றி யறிந்ததை யங்கியாலே
யிங்குற வறிந்துநாமே நாமெனல் பிரமநிட்டை. (8)

சகத்துள சுகங்களெல்லாஞ் சகமெனக்கண்டு சற்று
மிகத்துறும் பொருளைவிட்டு மேகமாம் பொருளைநாடி
யுகத்துறு மான்மானந்த வதுதனையறிய வொண்ணு
வகத்துட னிருக்குமந்த வவத்தையே பிரமநிட்டை. (9)

நிர்க்குணப்பிரம நிட்டை நிட்டையோ நிட்டைதானே
சர்குணமறிந்த ஞானர் சகசரேயில்லை சற்று
முற்குண மூன்றுந்தள்ளி முயன்றவரென்பரான்றோர்
மற்கடம் போற்பிடித்தால் வத்துறும் பிரமநிட்டை. (10)

அவத்தைகளைந்துந்தூல மைந்துடனகந்தள்ளி
யிகத்துறும்பாழுந்தள்ளி யிருக்கின்றவவத்தைதள்ளி
மிகப்படரதுவுந்தள்ளி மின்மினி தள்ளிநின்ற
மகத்தையேயென்பர்மிக்க மானதோர் பிரமநிட்டை. (11)

எச்சிலாவிடத்திருந்து மெம்மனமொன்றாயிட்டும்
பாச்சுறுமகமும்பாறிப் பரமனம்பதமாயுள்ளி
னீச்சுறுமாயையற்று நித்தியபரமானந்த
மூச்சுடனகற்றிநின்ற முயற்சியே பிரமநிட்டை. (12)

அனித்திய விசாரமெல்லா மனித்தியமென்றவிட்டு
மினித்துய ராகாவென்ன வியலுறுமது நாமென்று
தனித்துறுந் தகைமைபெற்றுந் தத்துவக்கத்துந் தள்ளி
மனத்துறவறுத்து நின்ற மதியமே பிரமநிட்டை (13)

எண்ணிலா நினைப்புமற்று மெங்குமாம் பரமமாகி
நண்ணிய நாதமற்று நாட்டமுமன்றாயாக்கிப்
பண்ணிய பருவமுற்றிப் பாழுதற்பரமமாகி
யுண்ணிலை யுயரவாக்கி யுயர்வது பிரமநிட்டை. (14)

தத்துவமெம்ஃதுண்டாமோ தகையுடன துவுந்தள்ளி
மத்திமமதுவுந்தள்ளி மார்க்கமாஞ்சித்திதாண்டிச்
சத்திய வெண்ணமான சார்பதுந்தள்ளி நின்ற
வத்துவே யல்லாதாகும் மகத்ததும் பிரமநிட்டை. (15)

தொழிலதே உலகமாகத் தோற்றியபடியால் மிக்க
வழிவிலா வதனைப்பெற்று மகமுறவாக வெண்ணித்
தொழிலதைச்செய்தால்ஞானஞ் சேருமோதொழிலேயற்று
மிழிவிலாவகத்தையாங்கே யிறுத்துதல் பிரமநிட்டை.(16)

அயர்விலா வகத்தோடெண்ணி யயர்வறுமகத்தர் தம்பா
லுயர்நெறியுற்றுமந்த வுண்ணிலையுள்ளே காட்டிப்
பயமிலாப்பரமவின்பம் பார்த்துடன துவேயாத
லியலதுவாகுமென்ப ரீதுதான் பிரமநிட்டை. (17)

சாம்பவி யிராஜயோக சாதனைமுடிந்துமப்பாற்
சாம்புறுஞ் சாந்தமுற்ற சகசமாஞ்சாந்தி பெற்று
மாம்பல வீதத்தாலொக்கு மதிகமாஞ்சமாதி முற்றித்
தேம்படு தேவன்றானாத் தேருதல் பிரமநிட்டை. (18)

சகமெலாஞ் சுற்றிவந்துஞ் சத்துநேரறிந்தாரில்லை
யிகப்ரமிரண்டுமெற்று மீசனே யானென்றெண்ணா
மகமதுமற்று நின்ற வவசரந்தனிலேயாகு
மகமதினா றுமின்ப் வாகமே பிரமநிட்டை. (19)

சோத்திரமுத லைந்துன்பந் துரிசறத் தள்ளியப்பா
ல்ாத்திரமனதை யாற்றி யகநிலையறியவுள்ளே
காத்திருந்திறக்கும்வேலை கண்ணினுட்டோன்றுஞ்சோதி
பாத்திரமல்லையப்பாற் பதியது பிரமநிட்டை (20)

எண்ணிலாவூழிதோறு மேகமே யிருந்ததென்று [மோ
மெண்ணிலா வேதஞ்சொல்ல வறிந்தது மெண்ணுண்டா-
கண்ணினுற்றனே காணுங் ககனத்தையறியவெண்ணி
யுண்ணிலைநாடு மப்போ துயர்ந்தது பிரமநிட்டை. (21)

வாதினலறியவொண்ணு வத்துவைவழியதாகக்
காதினற் கேட்டதாலே கண்டதுமாமோ வென்ன
வூதியமதனலென்று முயர்பரநிலையை யுன்னி
யேதினு லாகுமந்த வியலது பிரமநிட்டை. (22)

அளவிலாத்தத்துவத்தை யறிந்தனனம்மவம்மா
களவுறுமனமே யென்றன் கருத்தினிற்கண்டதாலே
யுளமிகப்பொலிவுகொண்டு முயர்நிலையதுவேமிக்க
வளமுடன்மதித்துநோக்கி வதிந்ததும் பிரமநிட்டை. (23)

நால்வகைப்பிரதிபந்த நால்வகைச்சாதனத்தா
லாலூறு மரன்றனை யடங்கியே யழிந்ததானு
லோலமிட்டோடுமாயை யுயர்நிலைப்பசையுமற்றுக்
காலுறநிற்றனே காணிலாப் பிர்மநிட்டை. (24)

சென்னெறிமிகவேகொண்டு சேதனற்காக்கியந்த
நன்னெறி முடியுமட்டும் நாட்டமே நாட்டியுள்ள
மென்னெறி வழிச்செல்லாது மிகுந்தபினேகமான
வந்நெறிச்சென் றுமாங்கே யமருதல் பிரமநிட்டை. (25)

ஒவ்வொரு சமயவாதருட் குடையுழன் று ரூது
மவ்வவச் சமயந்தோறு மமர்ந்துறைய மலத்தேவைச்
செவ்வையாய்க் கண்டுமொன்றே தேர்ந்தபின் சேருமற்ற
கவ்வியவுரு வாமஃதே கண்டதோர் பிரமநிட்டை. (26)

மனத்தினின் றுலகமெல்லா மாதிரியனுட்டித் தார்த்துக்
கனத்துற வகமேகொண்டு காட்டினி லானாலுந்தா
ணினத்துடனிருந்து சாதித் திருந்தவர் தமக்குத்தோற்று
மனத்துற விழந்துநின்ற மார்க்கமே பிரமநிட்டை. (27)

பூதமாந் தடைகள் மூன்றும் பூதத்தா லிறக்கச்செய்து
வாதமாந் துன்பநீங்கி வழிப்படு தெய்வந்தீர்ந்து
மேதமா மூன்றுநீங்கி யிருந்தபினேகமான
சாதனை யிழந்து நின்ற சார்பதே பீரமநிட்டை. (28)

ஆந்தர வுலகமைஞ்ஞூ றுகூறு மதுவுமிந்த
வேந்துறு முலகமெல்லா மிகத்துறவறுத்து நேராய்
வாய்ந்துள வொன்றேநிற்கு வஃதையுமறுத்து வாழ்த்திப்
போந்துட னஃதுந்தீர்ந்த பூமியே பிரமநிட்டை. (29)

ஒளியினாற் காணுமிந்த வுலகமே தானென்றெண்ணி
வளியுறு வழக்கமின்றி வருவிகற்பத்தினின்று
மளியணுயான தன்னு லாகியவமளியேறிக்
களிதரு மதுவுநின்ற கணக்கதே பிரமநிட்டை. (30)

வார்த்தைக ளுதிக்கு மந்த வழியது மென்னவென்று
பார்த்தபின் றன்னைப்பார்த்துப் பார்த்திடம்பரிந்துவிட்டுக்
காத்திருந் தப்பாற்கண்ட கரியதுங்கழலவிட்டுப்
பார்த்திருந் திலங்குமாங்கே பயில்வது பிரமநிட்டை. (31)

எண்ணறு மாகுமட்டு மியலறுமினிமை யாய்ந்து
மண்ணினி னெதிரேநரட்ட மாற்றியே மதியணுகி
வண்ணமும் வானமுற்ற வழிவழி வழக்கமாக
நண்ணிய நாதாந்தத்தின் நலமதே பிரமநிட்டை. (32)

சற்பனை கழிந்துகாணுங் காணமுங் கழிந்துபற்று
முற்பல முரணுந்தீர்ந்து முதலுந்தள்ளித்
தற்பர ஞானமாய்ந்துந் தனிநிலைபெற்று மஃதுங்
கற்பிதமாகி நின்ற ககனமே பிரமநிட்டை. (33)

சாக்கிர சொப்பனங்கள் சாற்றியசுழுத்தி மூன்று
மாக்கிய மனமதின்றி யறிவினையறிந்து மப்பா
லூக்கமா யுறக்கங்கொண்டு முயர்நிலை யுயரத்தூக்கி
வாக்கினு லறியவொண்ணு வதித்துவம் பிரமநிட்டை. (34)

சிவபரமான சத்தி சேர்வுறுஞ்சேதனன்றான்
பவபரமாக மாற்றிப் பண்ணிய சமாதிபற்றி
வுவமுறுமார்க்கமின்றி யுண்ணிலை யறவே விட்டுக்
கவலையைக் கண்டுமாற்றிக் களிப்பதே பிரமநிட்டை. (35)

சோம்பலை யறுத்துத்தள்ளிச் சுருக்கமாய்ச் சூக்கமான
நாம்பல வுபாதியாலே நவின்றநாமங்கள் விட்டுப்
ப்ாம்பணையானை விட்டுப் பரமிகு மரணைவிட்டு
வோம்பியவுவ கையற்று முயர்வதே பிரமநிட்டை. (36)

எவ்விட மிருந்தாலந்த விடமதுவுமிருக்கும் வந்த
வவ்விட மதனாலந்த வாருயிரடைய மாற்றி
வவ்விய வகத்தால் மன்றும் மானவன் மகிழுஞ்சோதி
யவ்வித மிருக்குமப்போ தறிகுதல் பிரமநிட்டை. (37)

சத்துடனிருக்கு மந்தச் சற்குணத்துடனே விட்டு
மத்திமவ வத்தையைந்து மாற்றியே நிருவிகற்ப
முத்தம மில்லையென்ன வுண்ணிலையறவே விட்டுச்
சத்தியமின்றி நிற்குஞ் சகசமே பிரமநிட்டை. (38)

சருவமுஞ் சத்தியந்தா னாகிலுஞ் சகசானந்த
மருவ் மாயிருப்பதாலே யாதினுமிராக மின்றிப்
பூரிமய லகற்றியப்பாற் போயதின்பக்க மில்லாக்
கரியது மறவேவிட்டுக் காண்பதே பிரமநிட்டை. (39)

சாதனமின்றி யெங்குஞ் சார்பதுஞ்சரித்து நின்று
மோதுறு முயர்ந்த வண்ண முயர்நிலை யுள்ளேதேக்கிப்
பாதக மில்லாதான பண்டிதத் தன்மைவிட்டு
மேதுறுமப்போ தாகு மின்பமே பிரமநிட்டை. (40)

திருசிய மகற்றிநின்ற திருக்குவே பிரமநிட்டை
திருசிய மனைத்துநின்ற திரமதே பிரமநிட்டை
திருசியத் தப்பாலாகுந் தெய்வமுங் கடந்துநின்ற
திருசியவு வகையற்ற தீரமே பிரமநிட்டை. (41)

சுகமெலாஞ் சுகமாய்நின்ற சூத்திர ரூபமான்
வகமெலா மறவேவிட்டு மாபரவித்தை யற்று
மிகவுரை வேதவாக்கின் விரிமன மதனைவிட்டு
மகவுளமறிந்து நீத்து மாதலே பிரமநிட்டை. (42)

சாந்தமுஞ் சார்பாய்க்கொண்டு சத்துவ சேடமற்றுச்
மாந்திய மனமுமற்று மதிநினை வினைத்துமற்றுச்
சேந்திய சித்துமற்றுச் சிற்பரவியோம மற்றுக்
காந்திய பரமவின்பங் கழிதலே பிரமநிட்டை. (43)

ஆகமமுடிவுக் கப்பாலாகிய வறிவைக் கண்டு
மாகம விலக்கங்கண்டு மறிவுறுமதனைத் தள்ளி
யாகவரிடத்தினுற்றி யத்து விதத்தைப் போற்றிப்
பாகமா மதுவுமற்ற பரமமே பிரமநிட்டை. (44)

யாதனு வுடலுமிக்க யாதினு மதிட்டானத்தி
ஞாதலா லுலகமெல்லா மறிந்தபி னறிதலான
வாதனை வழியுமற்று விண்ணின் றிழிந்துவான
வேதனை யற்றுநின்ற விரிவதே பிரமநிட்டை. (45)

முக்குண மூன்றுஞ்சேர்ந்து முயன்றதை யறுத்துத்தள்ளி
யக்குண மதையுந்தள்ளி யறிவுரு வறிந்துநீத்து
முக்குணத்தி ரோதைமாற்றி முதலவன் முதன்மைபெற்றுஞ்
சிற்குணச் சுபாவந்தள்ளிச் சிறப்பதே பிரமநிட்டை. (46)

ஆதன மிருக்குமந்த வாதனமனைத்துந் தள்ளிச்
சேதனஞ்சேர்ந்து மிக்கச் சேத்திர மறிந்துநீற்றிக்
காதறுத்த தனுற்கண்டு கற்றறிந்திருக்கு மத்தை
வீதறச் செய்துமெல்ல விதிப்பதே பிரமநிட்டை. (47)

சுத்தவா தனையடைந்துஞ் சுத்தத்தைச் சுருக்கிமிக்க
வத்தனு ரருளைப்பெற்று மாகமந்தேர்ந்து மஃது
மத்திமமென்றுநீத்து மகநிலை யடைந்து மாற்றிப்
பத்தியா லதுவுந்தள்ளிப் பறிதலே பிரமநிட்டை (48)

எண்ணினு லெண்ணவொண்ணு விகத்துறும் பதார்த்தமெல்-
கண்ணினுற்காணலாகுங் கருத்தையுங்கடந்துமப்பா [லாங்
குண்ணிலை யதுவுந்தாண்டி யுத்தமவுருவு நீத்துப்
பண்ணிய பரிவுமாற்றிப் பார்ப்பதே பிரமநிட்டை (49)

ஆத்தும நிட்டைநின்று மடியரையடி யோடாங்கே
யேத்துறு மிவற்றையெல்லா மெள்ளளவின்றி யெண்ணிக்
காத்திருந் திருந்துமப்பாற் கண்டதோ ரான்மவெண்ண
மாத்திய பின்னராங்கே மகிழ்வதும் பிரமநிட்டை. (50)

நாதமுங் கடந்தநாத வேதமு நண்ணியுள்ளி
லோதிலா வாறுமாற்றி யுயர்ந்தவ ருயர்வைப்பற்றி
வாதினலிறத்து வண்ணவாக்கியஞ் சோதனித்தே
யேதினு லுருகுமாக மிருப்பதும் பிரமநிட்டை. (51)

பாரமார்த் திகமாஞ்சத்தை பிராதிபாசிகமும் பார்த்து
மாரனூர் வியாவகாரசத்தையு மறிந்துதள்ளிப்
பாரமார்த் திகத்தின்பாரம் பார்த்துடன் பதியைத்தள்ளிச்
சோரனு முடிவினின்ற சொரூபமே பிரமநிட்டை. (52)

ஆத்துமம் பிரமந்தெய்வ மாகிய நாமங்கொண்ட
தேத்துவ மருளைத் தள்ளி யெண்ணுவ மதையுந்தள்ளிக்
காத்துரு வகத்தைத் தள்ளிக் கருத்தினு லாத்துமத்தி
லேத்தியே கறைத்துநின்ற வியல்பதே பிரமநிட்டை. (53)

சுந்தரமாதர்தங்கள் சுகத்தையே நாடியந்த
வந்தமாஞ் சுகமு மெங்கே யிருந்துடன் வருவதெண்ணிப்
பந்தமற்றிருக்கு மந்தப் பார்வையே பார்த்து மிக்க
வந்தமு முடிவு மின்றி யாவதே பிரமநிட்டை. (54)

சுகமய மாகுமின்ப சாலமுஞ் சதுரதாக
விகபரமுடனே விட்டுமெம் முடமிருக்கு மந்தச்
சகவிவகார மெல்லாஞ் சார்புடன் சரித்துத் தள்ளி
ககனமே தானுநின்ற கதியதே பிரமநிட்டை. (55)

தத்துவந் தொண்ணூற்றாறுந் தாண்டிய வவத்தைத் தள்ளிக்
யத்துவா நிச்சயந்தா னுகுறு மதுவுந்தள்ளிப்
பத்தியா லகத்தைப் பற்றிப் பரமிதி னுகம்போர்த்து
நித்திய வத்துதன்னில் நிலைப்பதே பிரமநிட்டை. (56)

துரியமுங் கடந்து நின்ற துரியத்தைத் தூரத் தள்ளிப்
பரிவுடன் றுரியாதீதப் பரமதைப் பார்த்து மிக்க
வரியதாமதனைத் தானு யறிந்தனுபவித்து மஃதுஞ்
சரியில தென்றுவிட்ட சகசமே பிரமநிட்டை. (57)

விட்டபின் வெளியா மென்று விளம்புவ ரதுவுந் தள்ளிக்
கட்டறுமதுவு நீத்துக் காரணப் பிரமந் தள்ளி
மட்டிலாவதுவுந் தள்ளி மார்க்க மெல்லாமுந் தள்ளி
விட்டவரதுவே யாகும் விமலமாம் பிரமநிட்டை. (58)

சாத்திரமறிய வெண்ணிச் சாத்திரமறிந்து தள்ளிக்
கோத்திரங் குலங்கள்விட்டுக் குடிபடை யறுத்துநீத்து
வாத்திமத் தன்மைவிட்டு வழிதெரிந்த தனிற்செல்லு
மாத்திர மதுவும்விட்டு மகிழ்வதே பிரமநிட்டை. (59)

தத்துவ முப்பத்தாறுந் தனித்தனி தனித்துநோக்கிப்
பத்தியா லதுவுந்தள்ளிப் பார்வையைப் பரமேயாக்கி
யித்திர மினிதுகண்டு மீசனையா னென்றெண்ணு
மத்திற மகற்றிநின்ற வறிவதே பிரமநிட்டை. (60)

சகத்துறுஞ் சமயமெல்லாஞ் சார்ந்துறுஞ் சகசத்தேவே
யகத்துறு மான்மாவென்ன வகத்தினிற் சலனமின்றி
யகத்துற நினைத்து நின்ற வாதியாம் பிரமந்தன்னி
னிகத்துற விருக்குமந்த வியல்பதே பிரமநிட்டை. (61)

அவத்தைக ளைந்துந்தள்ளி யாகமா மூன்றுந்தள்ளி
யவத்துறு மகமுந்தள்ளி யறுவகைச் சமயந்தள்ளி
யவத்துறு மின்பந்தள்ளி யள்ளிய வாகந்தள்ளி
யத்துடனவ மேயாதல் அவமிலாப் பிரமநிட்டை. (62)

பத்தியாலவனைப் பார்க்கப் பயமறும் பயத்தினோடு
முத்தியினியலை யாய்ந்து முழுமுதனுமே யென்னுஞ்
சத்துடன் சித்துந்தள்ளிச் சார்ந்திடு மப்பாலுற்ற
வத்துவே யல்லாதந்த வழக்கமே பிரமநிட்டை. (63)

ஆனந்த நிலையைக்கண்டு மஃது நம்மிடத்திற்றானே
யானந்த மாகுமென்ன வறிந்தபி னதுவுந்தள்ளி
யானந்த சொரூபநாட்ட மதிகமா மருட்போதத்தி
லானந்த மற்றுநின்ற வவதியே பிரமநிட்டை. (64)

கண்டதுந் தள்ளிநின்ற ககனமுங் கண்டுதள்ளி
யுண்டதுந் தள்ளியப்பா லுயர்ந்ததுந் தள்ளிநின்ற
யுண்டலை யதுவுந்தள்ளி யுத்தமச் சமாதிதள்ளி
வெண்டரும் பிரமானந்த வியலதே பிரமநிட்டை. (65)

ஓம். தத். ஸத்.